# இயல் 7.3 இயற்கணிதம்

பயிற்சி எண் :: 7.3.2.1.A

இயற்கணிதம் (Algebra) - கோடிட்ட இடங்களை நிரப்புக - தநாஅபு - பயிற்சி 3.1.1-2

## இயற்கணிதம் (Algebra) - கோடிட்ட இடங்களை நிரப்புக - தநாஅபு - பயிற்சி 3.1.1-2

1. கோடிட்ட இடங்களை நிரப்புக.

i) $16x$ - 7 என்னும் கோவையின் மாறி ____

$16x$ - 7 என்னும் கோவையின் மாறி $x$

மாறிகள் மாறக்கூடிய உறுப்புகள் ஆகும். உதாரணமாக $a, b, c, \ldots, p, q, r, \ldots, x, y, z$

ii) $2y$ - 6 என்னும் கோவையின் மாறிலி உறுப்பு ____

$2y$ - 6 என்னும் கோவையின் மாறிலி உறுப்பு -6

மாறிலிகள் மாறாத மதிப்பை கொண்டவை ஆகும். உதாரணமாக 1, 2, 3, 4, . . .

iii) $25m + 14n$, என்னும் கோவையில், $25m$ மற்றும் $14n$ ஆகியவை ____ உறுப்புகள்.

$25m + 14n$, என்னும் கோவையில், $25m$ மற்றும் $14n$ ஆகியவை மாறுபட்ட உறுப்புகள்.

iv) $3ab + 4c$ - 9 என்னும் கோவையில் மொத்தம் ____ உறுப்புக்கள் உள்ளன.

$3ab + 4c$ - 9 என்னும் கோவையில் மொத்தம் 3 உறுப்புக்கள் உள்ளன.

v) $-xy$ என்னும் உறுப்பின் எண்கெழு ____ ஆகும்.

$-xy$ என்னும் உறுப்பின் எண்கெழு -1 ஆகும்.

2. சரியா, தவறா எனக் கூறுக.

i) $x + (-x) = 0$

$x + (-x) = 0$ என்பது **சரியாகும்.**

$$x + (-x) = 0$$
$$x - x = 0$$
$$0 = 0$$

ii) $15abc$ என்னும் உறுப்பில், $ab$ -ன் கெழு 15 ஆகும்.

$15abc$ என்னும் உறுப்பில், $ab$ -ன் கெழு $15c$ ஆகும் எனவே இது **தவறாகும்.**

iii) $2pq - 7qp$ ஆகியன ஒத்த உறுப்புகளாகும்.

$2pq - 7qp$ ஆகியன ஒத்த உறுப்புகளாகும் என்பது **சரியாகும்.**

பெருக்கல் செயலி பரிமாற்றுப் பண்பு கொண்டுள்ளதால் இவை ஒத்த உறுப்புகளாகும். எனவே, $pq = qp$

iv) $y = -1$ எனும்போது $2y - 1$ என்னும் கோவையின் மதிப்பு 3 ஆகும்.

$y = -1$ எனும் போழுது $y - 1$ என்னும் கோவையின் மதிப்பு 3 ஆகும் என்பது **தவறாகும்.**

$$2y - 1 = 3$$
$$2(-1) - 1 = 3$$
$$-2 - 1 = 3$$
$$-3 \neq 3$$

## Information Rights & Disclaimers

Sum & solution prepared on Friday 29th July, 2022 :: 14:15 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.
https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally well permitted. However, doing so for commercial purpose(s) is/are strictly prohibited.